Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 கார்த்திகை 8 ஜுலை ஹஜ்! 22 இதழ்: 284
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-11-78

JAFFNA
LAW ACADEMY
வங்கி ஊழியர்களுக்கான
B. T. I. Part I (August)
பரீட்சைக்கான விரிவுரைகள்
விரைவில் ஆரம்பமாகின்றன.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
பதிவாளர்.
யாழ். சட்டக் கல்வி
நிலையம்
'தையல் முத்து மாளிகை'
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 0864

# "தமிழ்ராஜ்யம் எதுவும் இங்கு இருந்ததில்லை!

## மூன்று இராஜதானிகளும் இருந்ததாக சரித்திரம் இல்லை

### ஆட்சிமன்றத்தில் தொழில் அமைச்சர்

(கொழும்பு)

"இலங்கையில் மூன்று இராஜதானிகள் இருந்ததாகச் சரித்திரமே இல்லை. இங்கு தமிழ் ராஜ்யங்களும் இருக்கவில்லை. ஒரேஒரு ராஜ்யம் கோட்டை மட்டுமே இருந்தது" என்று தொழில்அமைச்சர் காப்டன் சி. பி. ஜே. செனிவிரத்ன நேற்று பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்துகையில் கூறினார்.

வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் தொழில்அமைச்சர் நேற்று உரைநிகழ்த்துகையில் தமிழரின் பிரச்னைக்கு விரைவில் தீர்வுகாணும்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும், ஈழத்தில் சுமுகமான ஒரு அரசியலைத் தோற்றுவிக்கவே ஜனதிபதி விரும்புகின்ருர் என்றும் கூறினர்.

### "புலிவாலை விடவேண்டும்'

"நாட்டைப் பிரிப்பது என்பது இங்கு நடக்கமுடியாதது. தமிழீழம் ஒருபோதும் கிடைக்காது. கூட்டணியினர் வீணுக புலிவாலைப் பிடித்துக்கொண்டிருக்காமல் அதனைவிட்டு, அரசுடன் ஒத்துழைத்து பிரச்னைகளுக்குத் தீர்வுகாண

(6-ம் பக்கம் பார்க்க)

★ மட்டுநகரில் வெள்ளம்
★ கடலும் கொந்தளிக்கிறது....

## புயல்காற்று

### அபாயம் நீடிக்கிறது!

[கொழும்பு]

கிழக்குக் கரைநோக்கி வந்துகொண்டிருந்த சூறாவளி நேற்று அங்கிருந்து விலகிச்சென்றுவிட்டதாகவும் வடக்குப் பிராந்தியம் நோக்கி இன்று அதிகாலை வரை சூறுவளி வீசலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் நூறு மைல் வேகத்தில் காற்று வீசலாம் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் கடும்காற்றுடன் மழை அங்கு பெய்துகொண்டிருக்கிறது.

மட்டக்களப்பு முகத்துவாரம் வீதியில் இரண்டு அடி வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கரையோரப்பகுதியில் இருந்த பத்து மீனவர் வாடிகள் வெள்ளத்தினல் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் அதிகரித்துவருகிறது.

நாவலடி கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. 500 குடும்பங்கள இங்கு பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலைக்கு அருகிலும், மட்டக்களப்புக்குச் சற்றுத்தொலைவிலுமுள்ள கடலில் பெரும் கொந்தளிப்பு காணப்பட்டது. பதினைந்து அடி உயரத்துக்கு கடல் அலைகள் எழுந்

(6-ம் பக்கம் பார்க்க)



'ஆடற்கலாசிரோர்மணிகள்' சிறீகாந்தம் சகோதரிகளின் மாணவியான செல்வி செல்வக்கலா செல்வரத்தினத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம், இன்று மாலை பம்பலப்பிட்டி பசிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறுகின்றது விழாவிற்கு கிராமியக்கைத்தொழில்அபிவிருத்திஅமைச்சர் தரு. ...ம தொண்டமான் தலைமைதாங்குவார்: பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கல்வி பயிலும் செல்வி செல்வக்கலாவின் அபிநயத்தோற்றம் ஒன்றினைப் இப் படத்தில் காணலாம்.

## சம்பள உயர்வை அரசு மீளாய்வு செய்யவேண்டும்

### -- திருமலை எம். பி.

(கொழும்பு)

"ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவர்கள், பத்து வீத சம்பள உயர்வினல் நன்மையடைவர், இதனல் மூளைசாலி

(6ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் மாநாடு டிசம்பர் 10-ல் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மாநாடு டிசம்பர் மாதம் 10ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. சங்கரப்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில் நேற்றுமுன் தினம் நடந்த கமிட்டிக்கூட்டத்தில் மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டது.

மாநாட்டை ஒத்திவைக்க வேண்டுமென்ற வெளியூர்க் கிளைகளின் பிரதிநிதிகளின் வேண்டுகோள் இக்கூட்டத்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகரசபைக்கு 5 கடைகள் மூலம் 2 லட்சம் ரூபா கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினல் ஸ்டான்லி வீதியில் குளத்தின் அருகே அமைக்கப்பட்ட ஐந்து கடைகளின் ரெண்டர் மூலம் சபைக்கு 2 லட்சத்து 6 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது.

92 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கடைகளுக்கு தலா 200 ரூபா மாத வாடகையாகவசூலிக்கப்படும்

இக்கடைகள்மூலம் 12 ஆயிரம் ரூபா மாநகரசபைக்கு வருமானமாகக்கிடைக்கும் என்று விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார்.

பஸ் நிலையத்தில் மேலும் 8 புதிய கடைகள், மின்சார நிலைய வீதியில் கட்டப்படுவதாகவும், இக்கடைகளும் ரெண்டர் மூலமே கொடுக்கப்படுமென்றும் அவர் கூறினர்.

தற்போது பழைய மார்க்கட்டிலிருக்கும் பாணைக்கடை, சுண்ணும்புக் கடைக்காரர்களுக்கும் சிறந்த மார்க்கட் ஒன்று கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர். [க]

## யாழ். மாநகரசபைக்கு 85,000 ரூபா கூடுதல் வருமாணம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள சந்தைகள், சைக்கிள் பாதுகாப்பு மூலம் கடந்த ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு 85,000 ரூபா கூடுதல் வருமானம் யாழ் மாநகர

[6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

24ம் நம்பர், பண்ணை ரோட், யாழ்ப்பாணத்தில் உள்ள தகரத்தாலான கருச் கட்டடம் 120 அடி நீளம் 40 அடி அகலத்தில் விற்பனைக்குண்டு. மில் போடுவதற்குச் சிறந்தது. மரம், வளை, தகரம் யாவும் நல்ல நிலையில் உள்ளது. நேரில் பார்வையிட்டு, விலை விபரத்திற்கு மேற்படி கருச் உரிமையாளர் சில்வாவுடன் தொடர்புகொள்ளவும். 0850

யாழ். நகரில் இரண்டு கடைகள் விற்பனைக்கு உண்டு. சப்பல் வீதியில் (முதலாம் குறுக்குத் தெருவுக்கு அருகாமையில்) விபரங்களுக்கு: ஆர். செல்லையா அன் கோ, 281/A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 085?

வவனியாவில் 20 பேர்ச் கடைகட்டக்கூடிய நிலம் பஸ் நிலையத்திற்கு எதிரே விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. தரகர்கள் இல்லை. சனி, ஞாயிறுகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0841

### இலங்கைப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண வளாகம்
பட்டப் பின் படிப்பு நெறிகளுக்குப்

## பதிவு செய்தல் 1979

## கலைப் பீடம்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் தகுதி வாய்ந்த பட்டம் பெற்றவர்களிடமிருந்து பின் வரும் பட்டப்பின் படிப்பு நெறிகளைப் பயில பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், சிங்களம், இந்து நாகரீகத்தில் எம் ஏ. பட்டம்.
2. வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், சிங்களம, இந்து நாகரீகத்தில் கலாநிதிப் பட்டம்;
3. இந்து நாகரிகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா

1978 டிசம்பர் 15-ந் திகதியுடன் விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கான இறுதி நாள் முடிவடையும். இது பற்றிய மேலதிக தகவல்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையை (9''×4'') உதவிப் பதிவாளர்/கல்விக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதில் பிரதிப் பதிவாளர்.
யாழ். வளாகம்,
1978-11-22. 0871




### தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகள் உள்ள வீடு ஒன்று ஆசிரிய தம்பதிகளுக்கு தேவை. விபரங்களுக்கு: பொ. பரஞ்சோதி, பழைய உடையார் ஒழுங்கை, வி. எம். ரோட், பருத்தித்துறை. 0863

நண்பகல் 1-30 மணி முதல் மாலை 7மணிவரைகாசாளராக கடமையாற்ற முன் அனுபவமுள்ள ஒருவர் தேவை. 26-11-78 காலை 9 மணி முதல் 12 மணி வரை நேரில் விண்ணப்பிக்கவும். சன்லையிற் றைக்கிளீனேஸ், ராணி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 0866

## கேள்வி விளம்பரம்

### முள்ளிப்பற்றுக் கிராமப்பகுதி

இயக்கச்சி

கீழ்க்காணப்படும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் மேற்படி கிராமப்பகுதியின் விசேட ஆணையாளர் ஆகிய என்னால் ரூபா 100/- கேள்வி வைப்புப் பணமாகவும் மீளளிக்கப்படாத பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்துவதன் பேரில் 12-12-78-ந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2-30 வரை வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தில் 13-12-78-ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். தவறிய ஒப்பந்தகாரர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது,

### வேலைகள் விபரம்

1. கொற்றன் டார்குளம் வீதி. திருத்தல்.
2. ஐயன் கோவில் வீதி, அமைத்தல்,
3. கோவில்வயல் பண்ணை வீதி அமைத்தல்,
4. கோவில்வயல் பஸ்தரிப்பு நிலையம் அமைத்தல்.
5. இயக்கச்சி சந்தைக்கு கேற் தூண்கட்டுதல்.

மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

எம். எம். மக்பூல்,
(ஒப்பம்)
விசேட ஆணையாளர்.

0869

## "சலுகை அல்ல வேண்டுவது பூரண விடுதலையே"

(நெல்லியடி)

"தமிழினம் இன்று பூரண விடுதலையையே வேண்டி நிற்கின்றது. சலுகைகளையோ அல்லது மந்திரிப் பதவிகளையோ எதிர்பார்க்கவில்லை. தமிழ் மக்களில் ஒரு சில சலுகைகளை கடந்த காலங்களில் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இன்று அன்றைய நிலை முற்று முழுக்க மாறிவிட்டதை தமிழ் மக்களினதும் குறிப்பாக இளைஞர்களினதும் மனோ நிலைகள் எடுத்துக்காட்டுகின்றது."

மேற்கண்டவாறு உடுப்பிட்டி இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. ச. செந்துராஜா கரவெட்டி மேற்கில் நடைபெற்ற இளைஞர் பேரவை கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. கனக ராஜதுரை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், திரு. செந்துராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

"சிங்கள ஆட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட அடக்குமுறையெல்லாவற்றுக்கும்வித் தி—து கடந்த காலத்தில் தமிழ்த்தலைவர்களால்விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆனல் இன்று மாவட்டசபையை ஏற்பதுபோல் மாவட்ட மந்திரிப் பதவி என்று கூறுகின்றீர்கள் 10 வருடத்தின்பின் ஏற்பட்ட அரசியல் ஞானம் இது.

தமிழினப் பிரச்னை இன்று உலகறிந்த பிரச்னையாக உருவாகிவிட்டது இது உள்நாட்டுப் பிரச்னை என்ற நிலை மாறிவருகின்றது. இச்சூழ்நிலைகளை தமிழினம் நன்கு அறிந்து தமக்கிடையே உள்ள சமூக, பொருளாதார, மத, இன வேறுபாடுகளை மறந்து இன விடுதலைக்காகப் போராட முன் வரவேண்டும்."

இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு சி. மமேந்திரன் உட்பட பலரும் பேசினார்கள். (உ)

## நினைவு விழா

[பண்டத்தரிப்பு]

முன்னாள் திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உப அதிபரும், அறிஞருமான அமரர் திரு. பொ. கைலாசபதியின் நினைவு விழா இம்மாதம் 26 ம் திகதி பிற்பகல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, ஆசிரியர்கள் ஆ. சபாரத்தினம், ச. பரநிருபசிங்கம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றுவார்கள். அருட்கவி சி. விநாசித்தம்பி நினைவாஞ்சலி கவிதைகளைப் பாடுவார். [உ]

"தட்டுப்பாடு, விலை அதிகரிப்பை

## தடுக்கவே மிளகாய், வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

வெங்காயம் மிளகாய் ஆகிய பொருட்களுக்குத் தட்டுப்பாடும் இருக்கக்கூடாது, விலை உயர்வும் இருக்கக்கூடாது என்பதற்காகவே நாம் அவற்றை இறக்குமதி செய்யத் தீர்மானித்தோம்.

இவ்வாறு வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவா மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடபகுதி மிளகாய், வெங்காய உற்பத்தியாளர் தமக்கு ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்துக்கொண்டால் அதன் மூலம் அரசுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படும். இத்தகைய ஒரு கூட்டுறவு முறையை வெலிமடை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கொண்டிருந்ததால் உருளைக் கிழங்குக்கு உத்தரவாத விலையை அவர்கள் பெறமுடிந்தது.

வடபகுதி விவசாயிகளும், தென்பகுதி விவசாயிகளும் உற்பத்திச்செலவுபற்றி வேறுபாடான கருத்துக்களைத் தெரிவிப்பதால், மிளகாய், வெங்காயத்துக்கு உத்தரவாத விலை ஒன்றை தீர்மானிக்கமுடியாமலிருக்கிறது.

திரு. எக்ஸ். எம், செல்லத்தம்பு: இரு குதியினரையும் ஒன்றாக அழைத்து ஆலோசிக்கலாம்.

லலித்: அதற்கு முன்னர் நான் விபரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்தமுறை நான் யாழ்ப்பாணம் வரும்போது நீங்களும் (த வி கூ) கலந்துகொண்டு ஆலோசனை தாருங்கள். பாவனையாளர்களின் நலனையும் நாம் பேணவேண்டும். கடந்த அரசின் காலத்தில் தரகர்களே லாபத்தைப் பெற்றார்கள். தட்டுப்பாடும் இருக்கக்கூடாது, விலை உயர்வும் இருக்கக் கூடாது என்பதற்காகவே நாம் அவற்றை இறக்குமதிசெய்யத் தீர்மானித்தோம். (இ-ம)

### வவனியாவில்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

5 அடி உயரமும், நடுத்தர உடற்கட்டும், கருமை நிறமும் கொண்ட இவர் பிஜாமா சாரமும், ஷேர்ட்டும் அணிந்துள்ளார்.

இவர் யாரென அடையாளம் காணப்படவில்லை.

வவனியா பொலிசாருடன் இவரது உறவினர் அல்லது நண்பர்கள் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகிறது. [உ]

## பிரதிநிதி தெரிவு

[யாழ்ப்பாணம்]

தேசிய தொழிலாளர் சங்கத்தின் வடபிராந்தியப் பிரதிநிதித் தெரிவுக்கான தேர்தல் நாளை கொழும்பு இ.போ.ச. நாரஹென்பிட்டி சாலிகா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இத்தேர்தலில் காரைநகர் இ போ. ச. டிப்போ தேசிய ஊழியர் சங்கம் தனது அபேட்சகராக சங்கச் செயலாளரான திரு.க. த. ஜெயலிங்கத்தை ஏகமனதாகத் தெரிவு செய்துள்ளது.

இதுவரை மேற்படி பிரதிநிதியாக இவரே பதவிவகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## விதை கிழங்கு விநியோகம்: விவசாயிகள் திருப்தி

[சங்கானை]

தொல்புரம் கமநல சேவைப் பிரிவு கீரிமலை கமநல சேவைப் பிரிவு ஆகிய இடங்களில்உள்ள விவசாயிகளுக்கு விதை உருளைகிழங்குவிநியோகம் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளதென இப்பகுதி விவசாயிகள் திருப்தி தெரிவிக்கின்றனர்.

முன்னைய வருடங்களைவிட இம்முறை கிழங்கின்விலை கூடி இருந்தாலும் காலபோகத்திற்கான நடுகைகாலதாமதமின்றி செய்வதற்கு அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பின் காரணமாக பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். தவராஜா எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கை காரணமாக இந்த கிழங்குகள் தேங்கிக்கிடந்து அழுகல் ஏற்படாமலும் மற்றும் நஷ்டம் ஏற்படாதவகையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டமைகுறித்து இப்பகுதி விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் அதிகம் விரும்பிக்கேட்ட 'ஆக்கா' எனப்படும் இனமும் அவர்களுக்குகந்த பருமனும் இயன்ற அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளன. [உ]

பருத்தித்துறைத் தொகுதியில்

## கஜு உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகும்

(நெல்லியடி)

பருத்தித்துறைத் தொகுதியில் மீண்டும் கஜு உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த உற்பத்தி வடமராட்சியின் கிழக்குப்பகுதியில் மேற்கொள்ளப்படுகிறது.

கஜு உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் பருத்தித்துறை எம் பி. திரு க. துரைரத்தினத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில காலங்களுக்கு முன்பு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்குப்புறமுள்ள நிலங்களில் கஜு உற்பத்தி ஆரம்ப முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. [உ]

### ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி கோவிலாக்கண்டி மேற்கு ஸ்ரீ சரஸ்வதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் த. சண்முகராசா, செயலாளர் சோ. நவரத்தினம், தனாதிகாரி பொ. திரவியம், கணக்குப் பரிசோதகர் பொ. கந்தையா. உறுப்பினர்கள் 11 பேர். [அ]

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சி பட்டணசபை, கிளிநொச்சி.

கிளிநொச்சிச் சந்தையில் இரண்டு மாட்டிறைச்சிக் கடைகள் 01-01-1979-ந் திகதி தொடக்கம் 31-12-1979-ந் திகதி வரை நடாத்துவதற்கான தனித்தனி கேள்விகள் 1-12-1978-ந திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் முறையே கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் செலுத்துவதன் மூலம் 30-11-1978-ந் திகதி பிற்பகல் 1-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விகள் அரக்கு முத்திரை இடப்பட்டு 'விசேட ஆணையாளர், பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி' என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கேள்வியின் இடது பக்கத்தில் மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும் சென்ற வருட கேள்வியிலும் குறைந்த கேள்விகள் பரிசீலனைக்கு எக்காரணம் கொண்டும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

| | | சென்ற வருடக் கேள்வி |
|---|---|---|
| 1. | மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 30,250-10 |
| 2. | மாட்டிறைச்சிக் கடை இல. 2. | 29,750-12 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளரின்
பணிமனை,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி,
1978-11-21. 0870

ஈழநாடு
The Eelanaadu

## கிராமங்களில் வைத்தியசேவை

நம் நாட்டில் பணிபுரிவதற்காக பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த 15 பெண்கள் உட்பட 26 வைத்தியர்கள் சில தினங்களுக்குமுன் கொழும்புவந்து சேர்ந்தார்கள்.

இவர்களைப் போன்று மேலும் பல டாக்டர்கள் இலங்கையில் சேவையாற்றுவதற்காக பாகிஸ்தான்-இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்படவிருக்கிறார்கள்.

இவ்வாறு வரவழைக்கப்படும் வைத்தியர்கள் அனைவரும் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுகாதார அமைச்சின் கீழ் நாட்டின் கிராமியப் பகுதிகளில் சேவையாற்ற நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

நாட்டில் மேற்கத்திய மருத்துவமுறையில் பயிற்சிபெற்ற வைத்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள பலத்தபற்றுக்குறையே இவ்வாறு வெளிநாட்டு வைத்தியர்கள் தருவிக்கப்படுவதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது. மேலும் உள்நாட்டு வைத்தியர்கள் கிராமப்பகுதிகளுக்குச் சென்று பணியாற்ற மறுப்பதின் காரணமாக அப்பகுதிகளில் இந்த வெளிநாட்டு வைத்தியர்கள் பணியாற்ற அமர்த்தப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா கூறியிருக்கிறார்.

வளர்ந்துவரும் ஒரு நாட்டின் பொதுப்பணியில் ஈடுபட்டுழைக்கவேண்டிய ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களான வைத்தியர்கள் நாட்டின் முதுகெலும்புக் கொப்பான கிராமப்பகுதிமக்கள் மத்தியில் சென்று பணியுரியமறுக்கிறார்கள் என்றால்- அந்தப் பணியைச்செய்ய வெளிநாட்டு வைத்தியர்களை தருவிக்கவேண்டிய நிலைமை இருக்கிறதென்றால் - நமது வைத்தியர்களுக்கு உண்மையான நாட்டுப்பற்று இல்லையென்றுதானே சொல்லவேண்டும்!

ஆனால் இந்த நிலைமைக்கு உண்மையான காரணம் என்ன?

விரிவாக இதுபற்றி ஆராய்ந்தால்விசித்திரமான உண்மைகள் வெளிவரக்கூடும்.

நம் நாட்டின் பல்கலைக் கழகங்களில் பயின்று வெளிவரும் வைத்தியர்கள் வேறு எந்த நாட்டின் வைத்தியர்களுக்கும் திறமையில்குறைந்தவர்கள் அல்ல என்பதை மறுக்கமுடியாது.

ஆனால் அவர்களுக்குள்ள வசதிகள், சிகிச்சைக்குத் தேவையான சாதனங்கள், மருந்து வகையறுக்கள் போன்றவை இன்னமும் போதியளவு நவீனமாக்கப்படவில்லையென்ற குறைபாடு இருந்து வருகின்றது.

பல்வேறு வகையான கோரிக்கைகளையும், குறைபாடுகளையும் முன்வைத்து அரசாங்கத் துறையிலுள்ள வைத்தியாகள் ஸ்தாபன ரீதியில் நேரடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டிய அளவுக்கு நிலைமை முன்பு மோசமாக இருந்ததை இந்தத் தருணத்தில் நாம் நினைவுகூர்வது பொருத்தமாகும்.

அந்த நிலைமை இப்பொழுது மாறிவிட்டதா என்று கேட்பதும் பொருத்தமான கேள்விதான்.

இதேசமயம், உள்ளூரில் பற்றுக்குறை நிலவிய அதே சமயம், திறமைபெற்ற பல வைத்தியர்கள் வெளிநாடுகளில் வேலை தேடிப் போய்விட்டதையும் மறுக்க இயலாது.

தேசிய உணர்வும், மக்கள் பணியில் ஆர்வமும் இருக்கும் வைத்தியர்கள் பணவருவாயை மாத்திரம் நோக்கமாகக்கொண்டு செயற்படமாட்டார்கள். மக்கள் பணியை அவர்கள் தெய்வீகப் பணியாகக் கருதி நாட்டின் எந்த மூலைமுடக்கிலும் தன்நலம் கருதாமல் உழைப்பார்கள்.

ஆனால் இந்த உணர்வு வைத்தியர்களுக்கு இல்லையென்ற முடிவுக்கு வருவது நியாயமாகாது. அவ்வாறுயின் இவ்வளவு காலமும் கிராமியப் பகுதிகளில் வெளிநாட்டு வைத்தியர்கள் தாமா பணியாற்றினர்கள்?

வைத்தியர்கள் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு, வைத்திய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்வது அவசியம். அவ்வாறு பயிற்சி பெற்று வெளிவருபவர்களும், ஏற்கனவே சேவையிலிருப்பவர்களும் விருப்பமுடன் கிராமப்பகுதிகளுக்குச் சென்று பணியாற்றுவதற்குவேண்டிய ஊக்கமும், வசதியும், பாதுகாப்பும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

வைத்தியர்களின் சேவையை அரசும், பொதுமக்களும் உரிய முறையில் அங்கிகரித்துப் பாராட்டி ஊக்கமளித்தால் அரசியல்வாதிகள் செய்யும் பணியைவிடத் தேசியமட்டத்தில் அதி உன்னதமான சேவையை இவர்கள் நாட்டுக்கு அளிப்பார்களென் பதில் சந்தேகமில்லை.

# சைவ தர்மமும் அதன் சிறப்பியல்பும்

பண்ணிசைக் கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

சைவ தர்மம் தத்துவச் சோதனை அடிப்படையில் தோன்றி நிலைகொண்டுபரந்து வளர்ந்ததாகும். சைவதர்மம் குறிப்பிட்ட சில கோட்பாடுகளை உடைய மதமன்று. விரிவானதும் சிக்கலானதும், ஆனால் சூக்குமம்மிக்கதுமான எத்தனையோ ஆத்மசிந்தனைகளையும் அநுபூதிகளையும் கொண்டதாகும்.

சைவதர்மம் எதனையும் தன்னுடன் அணைத்துக்கொண்டு தனதாக்கிக்கொள்ளும் ஒரு சிறப்பியல்பினைக் கொண்டது.

இயற்கையின் குருட்டுத்தனமான சக்திகள் நம்மை ஆட்டிவைப்பது ஒருபுறமிருக்க, இவ்வுலகில் எந்தக்கலையும், தத்துவமும் கிரேக்கர்கள் தந்த செல்வமென்ற எண்ணத்தில் வளர்ந்தவர்கள் நாம் என்பதாலோ என்னவோ சைவதத்துவத்தை அறியாதிருந்துவருகின்றோம்.

### உலகில்பாதி சைவதத்துவம்

உலகின்பாதிப்பகுதிக்குமேல் சைவதர்மத்தின் அடிப்படையில்தான் இயங்கிவருகின்றது. சீனு, ஜப்பான், திபெத், சியாம், பர்மா, இலங்கை இந்நாடுகள் இந்தியாவையே தம் ஆத்மிகத்தின் தாயகமாகக் கருதுகின்றன.

சைவ நாகரிகம் வரலாற்றுத் தொன்மை மிக்கது. இந்நாகரிகம் பண்டைக்காலத்திலேயே உயர்நிலை எய்தி இன்றுவரை இடையருது, சில காலம் சொல்ல ஊர்ந்தும், நிதானித்தும் பெருகிவந்துள்ளது ஐயாயிரம் ஆண்டுகளாக அது ஆத்ம சிந்தனையிலும் அநுபவங்களிலும் பல திருப்பங்களைக்கண்டதாகும்.

### வெள்ளிவிருந்து

வரலாற்றுக்காலத்திலிருந்து பல்வேறு இனத்தவர், கலாச்சாரத்தவர் இந்தியாவில் புகுந்தும் சைவம் அதன் தனித்தன்மையை இழக்கவில்லை. சக்திவாய்ந்த வேற்று சமயங்களிடம் தென்படாத உயிர்ச்சத்து சைவப்பண்பாட்டில் இருந்தது. மரத்துள் ஜீவசாரம் ஓடுகின்றதா என்பதை அறிவதற்கு அதைப்பிளந்து பார்க்கவேண்டிய அவசியமில்லாதது போல் சைவதர்மத்தைத் துருவி ஆராயவேண்டியஅவசியமே இல்லை எனலாம்.

### 'இந்து' என்றால்

சிந்துநதி தீரத்தில் வாழ்ந்த ஆதிமக்களைப் பாரசீகத்தவரும் பின்னர் மேற்கிலிருந்து படையெடுத்துவந்தவர்களும் இந்துக்கள் என்றே அழைத்தனர். ஆரியத்தொடர்பால் பலமாறுதல்கள்அடையலாயின அநாதியான சைவம். ஆனால் சிந்துநதிக்கரையில் பிறந்த அந்தப் பழையவேத மரபிலிருந்து அது பிறழவே இல்லை. இந்து எனும் சொல் தொல்குடி மக்கள், காட்டுமனிதர்கள், நாகரிகமடையாதவர்கள், பண்பட்ட திராவிடர்கள், வேதகாலத்து ஆரியர்கள் ஆகியோரைக் குறிக்கும் ஒரு சொல்லாக விளங்கியது. அல்லாமலும் இந்து என்றசொல் முதலில் நாட்டையே குறித்துநின்றதாகும்.

தர்மம் குறித்து சைவ நோக்கு கவர்ச்சிமிகுந்தே காணபடுகின்றது. அதன் அசையாத சித்தாந்தங்களே ஒருமதத்திலிருந்து மற்றொரு மதம் வித்தியாசப்படுவதை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் சைவ தருமமோ இது போன்ற வரையறைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை. தருமம் என்பது சாத்திர ரீதியானமுடிவுகளைக் கொண்டதுமன்று அதுவே ஒருவனதுவாழ்வு அனுபவமாகும். அதுமெய்ப்பொருளைக் காணும் ஓர் உள்நோக்காகும். தருமம் ஆத்மாவின் ஒரு விசேஷ நோக்கு என்றே கூறலாம்.

வேதங்கள்பால் ஒரு சைவன் கொண்டுள்ள மனப்பாங்கு எதையும் ஆராய்ந்துநோக்கும் நம்பிக்கையின்மேல் உருவானதாகும் நம்முடைய மூதாதையர்களுக்குப் பற்றுகோடாக இருந்த கொள்கைகளும் நெறிகளும் நமக்குப் பயன் தரக்கூடியவை என்பதனாலேயே இந்த நம்பிக்கையில் உறுதி ஏற்படுகின்றது எனப் பொருந்தும்.

சைவதர்மம் வேதங்களைமட்டும் பின்பற்றவில்லை. இதிகாச புராணங்களையும் அடியொற்றியே செல்கின்றது எனலாம். சத்தியத்தின் விதவிதமான உள்ளுணர்வுகளின் முக்கியத்துவத்தையும் இந்தியமக்களின் பல்வேறு சம்பிரதாய கிரந்தங்களையும் ஏற்றிருப்பதனால் வண்ணவண்ண இழைகள் ஊடும் பாவுமாகவைத்து நெய்த விசித்திரப்புடவையாக சைவ தர்மம் விளங்குகின்றது என்றும் கூறலாம்.

சைவத்திலுள்ள புராதன இயற்கைச்சக்திகளின்வழிபாடு தொடங்கி தந்தை, அன்பு, தாய்-அன்புவரை கடவுளைப் பற்றிய நோக்குயாவும் தெய்விகத்துடன் மானிடர் கொள்ளும் உறவின் ஏதாவது ஓர் அம்சத்தையே குறித்துநிற்கின்றது என்றும் கூறலாம். எனவே சைவதர்மம் மிகமேலானதும் தனித்துவமானதுமாகவிளங்குகின்றது என்பது நன்குபெறப்படும். எனவே சைவதர்மம் மென்மேலும் தழைத்தோங்க வேண்டுமாகில் நாடெங்கும் காணப்படும் கோயில்கள், மடங்கள், ஆசிரமங்கள் வெறும் பூசை, பிரார்த்தனைகளுக்குரிய இடங்களாக இல்லாமல் சைவ சிந்தனை, தத்துவங்கள் வளர்வதற்கான வித்தியாபீடங்களாகவும் மிளிரவேண்டும். இம்முயற்சியே சைவர்களை ஆத்மீக உண்மை வழிக்குத் திருப்பும் சாதனமாகும்.

(வளரும்)

## பரீட்சை

[யாழ்ப்பாணம்]

சைவபரிபாலனசபை நடாத்தும் அகில இலங்கை சமய பாடப் பரீட்சை இம்மாதம் 26ம் திகதி ஞாயிறு காலை ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

ஏறக்குறைய 110 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளுக்குப் பிரவேசப் பத்திரங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டதாகப் பரீட்சைச் செயலாளர் திரு. வ. கந்தவனம் தெரிவித்தார். [அ]

## மணிவாக்கு

ஒரு மரம் தன் விஷயங்களைக் கவனித்துக்கொள்வது போலக்கூட எந்த ஒரு மனிதனும் தன் காரியங்களை நிர்வகித்துக் கொள்வதில்லை.

—ஜோர்ஜ் பேர்னட்ஷா



# கிராமங்களில் செல்வம் கொழிக்க வழி என்ன?

## உதவி அரசாங்க அதிபர் விளக்கம்

[மட்டுவில்]

''நமது கிராமங்கள்தோறும் மூலப்பொருட்கள் நிறைந்து பரந்துள்ளன. அவற்றை எமது மாதர் ஆதாரமாகக்கொண்டு, தமது ஓய்வு நேரத்தைப் பயன் படுத்தினால் நமது கிராமங்கள் எல்லாம் குபேரபுரிகளாக மாறிவிடும். இந்த அடிப்படை உண்மையை எமது நாவற்குழி கிராமிய மாதர்சங்கம் இன்று நிரூபித்துவிட்டது. இது தென்மராட்சிப்பகுதி கிராமங் களுக்கே முன்னோடியாகத் திகழ்கின்றது''.

இவ்வாறு தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள் கூறினார்.

நாவற்குழி அரசினர்கிராமிய மாதர் சங்கத்தின் பொருட் காட்சி ஒன்று நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத் தில் நடைபெற்றது. இப் பொருட்காட்சி விழாவை தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் மங்கள விளக்கேற்றி வைக்க, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பி. ஜெசு நாதன் திறந்துவைத்தார்.

இந்தப் பொருட்காட்சியில், மாதர்சங்கத்தாரின் தையல், கைப்பணி,மணியியல் தயாரிப் புகள் உட்பட பலபொருட்கள் இடம்பெற்றன.

மாதர் சங்கத்தலைவி திருமதி சி. கமலநாதன் வரவேற் புரை நிகழ்த்தினர். உதவி அர சாங்க அதிபர் திரு. முருக வேள் தனது தலைமை உரை யில் மேலும் கூறியதாவது:

''ஒவ்வொரு கிராமத்திலும் மாதர்கள் தமது ஓய்வு நேரத் தைப் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும். ஒவ்வொருநாளும் தமக்குக்கிடைக்கும் ஓய்வு நேரத்தில் நமது கிராமியப் பொருளாதாரத்தை உயர்த்த முடியும் அதற்கு தையல், பன்னவேலை போன்ற அம்சங் கள் அவர்களுக்குக் கைகொடுக் கும் என்றார்.

சாவகச்சேரி எம். பி திரு. வ. ந. நவரத்தினம் பேசுகை யில், ''சகல துறைகளிலும் நமக்கு நமது இன ஒற்றுமை வேண்டும். அதைப் பிளவுபட விடாது காப்பாற்றவேண்டும். இப்படி ஒற்றுமையை வளர்ப் பதற்கு முதலில் சமூகக்குறை பாடுகளை ஒழிக்கவேண்டும்'' என்றார்.

கிராமிய அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சோ. சடாச்சரம், கிராமசேவை யாளர் திரு. இரா. அம்பல வாணர், கிளை அமைப்பு மேற் பார்வையாளர் திரு. எஸ். நடராஜா, தையல் மேற்பார் வையாளர் திருமதி ஆர். எம். அருளானந்தம் உட்பட மற் றும் பலர் பேசினர். [உ]

# எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

எதிர்கட்சித்தலைவரும் காங் கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கத்தை 4 ம் 5ம் தர அதிபர்களின் சம் பள முரண்பாடு பற்றி யாழ். மாவட்ட இலங்கை வித்தி யாலய தமிழ் அதிபர் சங் கத்தின் தலைவர் திரு. பொ. கனகரத்தினம் தலைமையில் திரு சி.சிவநாதபிள்ளை திரு. க சோமசுந்தரம் ஆகியோர் நேரில்சந்தித்தனர்.

இச்சந்திப்பில் 5-ம் தர அதிபர்களுக்கும் பயிற்றப் பட்ட உதவி ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் வகுக்கப் பட்ட முரண்பாட்டையும் கடந்த அரசாங்கம் சயற் பட்டகாலத்தில் கல்வித்திணைக் களம் 5-ம் தர அதிபர்களுக் குக் கொடுக்கலாமெனச் சிபாரிசு செய்யப்பட்ட சம் பளத்திட்டத்தைத் தானும் கொடுக்காது விட்டுள்ளமை மையையும் இவர்கள் சுட்டிக் காட்டினார்கள்

! மேலும் அதிபர்கள் சங்க சம்மேளனம் ஆசிரிய சங்கங் கள் 4-ம் தர அதிபர் 5-ம்தர அதிபர்களின் கடமைகள் எவ்வித வேறுபாடுமின்றி இருப்பதால் இருதரங்களும் ஒன்ருக்கப்பட வேண்டும். என நீண்டகாலமாகக்கேட்டு வருகின்றனர் என்பதையும் இவர்கள் எடுத்துக்காட்டி ஞர்கள்.

தாம் விரைவில் பாராளு மன்றத்தில் இவ்விடயத்தை எடுத்துக்காட்டி ஆவன செய் வதாக இக்குழுவினரிடம் திரு அமிர்தலிங்கம் உறுதியளித் துள்ளார். ]ஊ-உ]

# ம. கிழக்கு பிரச்னைக்கு பூரண தீர்வுகாணவே எகிப்து விரும்புகிறது

## கார்ட்டரிடம் சதாத் தொலைபேசியில் வலியுறுத்து

கெய்ரோ, நவ. 23

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து பூரணதீர்வு காண்ப தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எகிப்து விரும்பு கிறதே ஒழியதனியான உடன் படிக்கைகளை மட்டும் செய்து கொள்ள அது ஒருபோதும் விரும்பாது என்று எகிப்திய அதிபர் ஜனப் அன்வர் சதாத் நேற்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டருக்கு தொலைபேசியில் கூறினார்.

இவ்வாறு எகிப்தியபிரதமர் ஜனுப் முஸ்தபா கலீல் தெரி வித்தார்.

எகிப்திய-இஸ்ரேலிய அமை திப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தவும் 'காம்ப்டேவிட்' தீர்மானத்திற் கமைய இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள எகிப்து திடசங்கற் பம் கொண்டுள்ளதாகவும் ஜனுப் சதாத் திரு கார்ட்ட ருக்குத் தெரிவித்துள்ளாராம்.

இதேவேளையில், அடுத்த வாரம் ஜனுப் சதாத் திரு. கார்ட்டருக்கு விசேடசெய்தி ஒன்றை அனுப்புவார் என் றும் ஜனுப் கலீல் தெரிவித் தார். (இ)

# 40,000 தொன் சீனி இலவசம்!

ஹனோய், நவ. 23

ஹனோயில் கைச்சாத்தான கியூபா-வியட்நாமிய பொரு ளாதார வர்த்தக உடன் படிக்கையொன்றின் கீழ் கியூபா 40,000தொன்சீனியை வியட்நாமுக்கு இலவசமாக வழங்கவுள்ளது. [இ]

# 3,000 அரசியல் கைதிகள் விடுதலை பெறுவர்!

ஹவானு, நவ. 23

சியூபாவிலுள்ள 3 ஆயிரம் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கியூபாஅதிபர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ இணக்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலை பெறவுள்ள 3 ஆயி ரம் கைதிகளும் அமெரிக்கா செல்ல விருமபுவதால் அவர் களை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று டாக் டர் காஸ்ட்ரோ தெரிவித்துள் ளார். (இ)

# சீனுவில் அரசுக்கு எதிரான சுவரொட்டிகள்!

பீக்கிங், நவ. 23

1976ம் ஆண்டு பீக்கிங்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் புரட்கிகரமானது. அந்த ஆர்ப் பாட்டத்தை அடக்கியதுமிகத் தவறுனது.

இவ்வாருன சுவரொட்டிகள் பீக்கிங்கில் ஒட்டப்பட்டுள் ளன.

மறைந்த தலைவர் மா-சே- துங் உட்பட பல முக்கிய தலை வர்களின் பெயருடன் இந்த சுவரொட்டிகள் ஒட்டப் ட் டுள்ளன. (இ)

# நீதிமன்றத்தில் ஆஜராக திருமதி காந்திக்கு உத்தரவு

புதுடில்லி, நவ. 23

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை அடுத்தமாதம் 8ம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

டில்லி மெட்பொலிட்டன் நீதிமன்ற நீதிபதி திரு. பி.கே ஜெய்ன்மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார்.

திருமதி காந்தி ஆட்சியிலி ருந்தபோது 1967ம் ஆண்டுகடி தம் ஒன்றில் கையெழுத்திட் டது தொடர்பாக திருமதி காந்தி விசாரிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

# வீடில்லாப் பிரச்னை தீர பரு. எம். பி. நடவடிக்கை

(நெல்லியடி)

பருத்தித்துறைத் தொகுதி யில் வீடில்லாப் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் பொருட்டு பருத்தித்துறை எம். பி, திரு. க. துரைரத்தினம் நடவடிக் கைகளை மேற்கொண்டுஸ்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் அரசாங்கத்தின் ஓராண்டு பூர் த்தியின் நினைவாக கட்டப்பட் டுள்ள 5 வீடுகளைத் தவிர மேலும் 25க்கு மேற்பட்ட வீடுகள் பருத்தித்துறை தொகு தியில் அமைக்கப்படவுள்ளன.

அமைக்கப்படவுள்ள வீடுகள் குடத்தனை, செம்பியன்பற்று, கற்கோவளம், பருத்தித் துறைக் கடற்கரை ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப் படும்.

வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ள காணிகளை யாழ். மாவட்ட வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையா ளர் திரு ராஜரட்ணம் வடம ராட்சி வட-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வீ. வேலும் மயிலும் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளார் கள்.

விரைவில் நிர்மாணிக்கப் படவுள்ள இவ்வீடுகள் வீடில் லாமல் அல்லற்படும் மீனவர் களுக்கு வழங்கப்படலாம் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

# கடிநாய் தொல்லை

]மன்னர்]

மன்னர்ப்பகுதியில் மீண்டும் கடி நாய்த் தொல்லை அதிகரித் துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது மன்னர் கடைவீதி பேக்கரிக்கருகில் ஒருவர் நாய்க் கடிக்குள்ளாகி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார்.


TFC

யமஹா மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தரின் ஆதரவுடன்

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட் நடாத்தும்

திரைப்படக் காட்சி

இன்று (24 - 11 - 78) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு

யாழ்-திறந்தவெளியரங்கில்

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 7680

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
பாலாஜி
அன்புளங்கே

Rio (Jaffna)
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

நாகம்ஸ்
(கன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
5-வது வெற்றி வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்-சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி [யாழ். நகர்]
எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
நடித்த
சிவகெங்கைச் சீமை (புதியபிரதி)

சாந்தி யாழ்நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலச்சந்தரின்... [புதிய பிரதி]
சொல்லத்தான் நினைக்கிறேன்
27th "BLOOD MONEY"

இன்று முதல் குதூகல ஆரம்பம்
கடந்த 12 வருடகால இடைவேளைக்குப் பின் புதுப் பொலிவுடன் உங்களை மகிழ்விக்க வருகிறுள்
"சபாஷ் மீனு"
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு
நடித்த (இரு வேடங்களில்)
சபாஷ் மீனு (புத்தம் புதிய பிரதி)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Robert Hunter
in
MARCO POLO
(Color-Scope)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜக்கம்மா
அடுத்தவெளியீடு; லலிதா

லிடோ ]யாழ்.நகர்[
போன் 7698 தினசரி 4காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

26-11-78 வரை
தினசரி 10-30, 2-30, 6-30 9-15
ராஜா (யாழ்நகர்)
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன் குமாரி
மற்றும் பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து
ஏமாளிகள்

பொருளாதார சுபீட்சம்:

# அமரர் ஜி.ஜி.வழியை தலைவர்கள் பின்பற்ற வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில், பொருளாதார சுபீட்சத்திற்காக பாடுபட வேண்டும். இதை உணர்ந்து தான் அன்று அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழ்ப் பகுதிகளில் 3 பெரும் தொழிற்சாலைகளை அமைத்தார். அவருடைய வழியை இன்றைய தமிழ்த் தலைவர்கள் பின்பற்றி பொருளாதார சுபீட்சத்திற்கு உழைக்கவேண்டும்.

மீசாலைகிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஜனநாயக இலக்கியப் பேரவையின் அரசியல் பிரிவினரால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பேரவை பொதுச்செயலாளர் திரு. மா. பொ. சி. பாலச்சந்திரன் மேற் கண்டவாறு கூறினர்.

திரு. கே. சிவராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது.

இன்றைய தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் முன் தாம் ஒரு முதலாளித்துவவாதிகள் என்பதனை தமிழ் மக்கள் முன்னிலையில் .காட்டி வருகின்றனர்கள். முன்னைய இடதுசாரி அரசாங்கத்தின் காலத்தில் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுக்காக பேரவைக்கு உள்ளும் வெளியும் போராடினர்கள் ஆனல் இன்று தமது சகபாடியான முதலாளித்துவ ஆட்சியில் வாய்மூடி மௌனியாக இருக்கின்றனர். பேரவையில் வன்மையாக கண்டிக்க கூடிய இடத்தில் கூட மதில்மேல் பூனையாக சந்தர்பத்தை தட்டிக்கழிக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர்மாவட்டஅமைச்சர்பதவிகளை ஏற்பதில் தவறில்லை. ஆனல்முக்கியமாக திருகோணமலை வவனியா, மன்னர், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களையே கையேற்க வேண்டும்.

ஜனநாயக இலக்கியபேரவை தமிழ் மக்களின்உரிமைக்காகப் போராடும் எந்த இயக்கங்களுடனும் தோளோடுதோள் நின்று போராட தயாராக நிற்கின்றது."

கீழ்க்காணும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு ஜனதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

மதுறுஓயா, மகாவலி, அபிவிருத்தி திட்டபிரதேசங்களில் இலங்கைபிரஜைகளாகப் பதிவு பெற்ற மலையக மக்களுக்கும் அப்பகுதிகளில் வாழும் வறிய விவசாய தொழிளாள வர்க்கத்தினரும் குடியேற சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அன்றி பிரதிநிதிகளையோ கொண்ட வட்டமேசை மாநாட்டை கூட்டி தமிழ் மக்களின் பிரச்னைகட்கு தீர்வு வேண்டும்.

மன்னர்ப் பகுதியில் வாழும் தொழிலாள வர்க்கத்தினரால் புனரமைப்புத் செய்யப்பட்ட காணிகளில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாமை இடமாற்றம் செய்யவேண்டும்.

சிறையில் வேதனைப்படும் தமிழ் இளைஞர்கள் மீது வழக்கு தொடர வேண்டும் அல்லது நிபந்தனையற்ற விடுதலை செய்யவேண்டும். (ச)

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 8-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(24-11-78)

மேடம்:- இறைவழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும். பிதாவழி மூலம் நல்ல செய்தியும் கிடைக்கும் மகிழ்ச்சிகரமானநாள்.

இடபம்:- வெற்றிப் பாதையில் வீறுநடைபோடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் தென்படும் சிலருக்கு இடமாற்றமும் கிடைக்கும். சுபதினம்.

மிதுனம்:- பொருள் வரவிற்கு உகந்தநாள். துணிவையே துணையெனக் கொண்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். பெரியோர் ஆதரவும் கிடைக்கும்.

கடகம்:- ஆணவப் போக்கினுல் மற்றவர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். பொருள் நஷ்டத்திற்கும் இடமுண்டு எச்சரிக்கையுடன் இருக்கவும்.

சிங்கம்:- மனப்போராட்டம் அதிகரிக்கும். தொழில் விடயத்தில் கவனம் செலுத்தவும் பொறுமை நன்று.

கன்னி:- வார்த்தைஜாலம் செய்வதன் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். சிலருக்கு பொது சனத்தலைகைக் கும் இடமுண்டு.

துலாம்:-பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில் துறையிலும் யின்தங்க நேரிடும். மனத்திடம் வேண்டும்.

விருச்சிகம்:- நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும். சமூகத்தில் மதிப்பு உயரும். தாய்வழி ஆதரவும் உண்டு.

தனுசு:- நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். பூமிப் பிணக்கில் சமரச முடிவு கிடைக்கும். புத்திரர்களால் புகழுக்குமிடமுண்டு.

மகரம்:- வேண்டாத சிந்தனைகள் தலைதூக்கும் தொழில் துறையில நஷ்டத்துக் கிடமுண்டு. பொறுமை நன்று.

கும்பம்:- களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிகிடமுண்டு பொருள் வரவிற்குமிடமுண்டு.

மீனம்: உடல் நலம் பாதிக்கப்படும். தொழிலில் தயக்க நிலைதென்படும். முயற்சியில் தடைகளுக்கிடமுண்டு. அடக்கம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# "படித்த வர்க்கத்திடம் தியாக சிந்தை இல்லை"

(யாழ்ப்பாணம்)

'படித்த வர்க்கத்திடமிருந்து தியாகங்களை எதிர்பார்ப்பதோ அல்லது அந்த வர்க்கத்தினரின் நடவடிக்கையினுல் சமூகத்திற்கோ, நாட்டிற்கோ விடுதலை கிடைக்கும் என்று நம்புவதோ நடைமுறைக்குப் புறம்பானதொன்ருகும். கீழ்மட்ட மக்களிடமிருந்துதான் . தியாகங்கள் பிறந்துள்ளன அந்தத் தியாகங்கள்தான் விடுதலைகளையும் தேடித்தந்துள்ளன என்பதனை உலகவிடுதலை இயக்கங்களை நோக்கினுல் நன்குணர முடியும்'

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப்பிரமுகரும், எழுத்தாளருமான திரு. கே.டானியல் கரவெட்டி கிழக்கு வளர்மதி சன சமூக நிலைய முன்றலில் நடைபெற்ற 'தியாகி கந்தவனம்' நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'தியாகங்களுக்கு ஒதுங்கிநின்று மேல்பூச்சாக சாதி ஒழிப்பு வாரத்தை நடாத்தியவர்கள் அதில் தாங்கள் தோற்றுவிட்டதாகப் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தத் தோல்வி தியாகங்கள் இன்றி எந்தவெற்றியையும் பெற்றுவிடமுடியாதென்பதை ருசுப்படுத்துகிறது.

எட்டு ஆண்டுகளுக்குமுன் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் தனது உயிரைக் கொடுத்த கந்தவனம் அதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகளுக்கு இன்று உரிமையுடையவராக விளங்குகிருர். இந்த போராட்டவழி ஒன்றே ஒன்றுதான் ஒடுக்கப்பட்ட மக்களினதும், ஏனைய பின்தங்கிய மக்களினதும், தமிழ்ச் சமூகத்தினதும், மொத்தத்தில் இந்த நாட்டினதும் விடுதலைக்கான வழியாகுமென்பதை மக்கள் நன்குணர வேண்டும்' என்ருர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சண் தலைமை) சார்பில் பேசிய எம். ஏ. சி. இக்பால் குறிப்பிட்டதாவது:

"போராட்டங்களை மறுப்பவர்கள் கந்தவனத்தின் தியாகத்தை மறுப்பவர்களாவர். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை மறுப்பவர்கள் வர்க்கப் போராட்டங்களை மறுப்பவர்கள், தமிழினத்தின் விடுதலையை மறுப்பவர்கள் தேசத்தின் விடுதலையை மறுப்பவர்கள் தியாகி கந்தவனத்தையும் அவர் போன்றவர்களின் தியாகங்களை மறுப்பவர்களாகிருர்கள். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்துதான் தியாகங்கள் பிறக்கின்றன. அந்தத் தியாகங்கள்தான் உண்மையான விடுதலையைத் தேடித்தர முடியுமென கம்யூனிஸ்ட்கட்சி திட்டவட்டமாக நம்புகிறது" என்ருர்.

தீவக இளைஞர் முன்னணித் தலைவர் திரு. வி. ரி. இளங்கோவன் பேசுகையில், 'தீவுப் பகுதியில் சாதிக்கொடுமை இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை என அறிக்கை விடுபவர்களும், கூறுபவர்களும் புங்குடுதீவு கண்ணகியம்மன் கோவிலடியில் முன்பு நடைபெற்ற சாதிஒழிப்பு போராட்டத்தையும், அதையடுத்து உயிர்நீத்த எழுத்தாளர் தளையசிங்கத்தின் தியாகத்தையும் மறுத்துவிட முடியுமா? இன்றுவரை நடந்து வரும் அசம்பாவிதங்களையோ மூடிமறைத்துவிடும் விதத்தில் பேசிவருவது வேதனைக்குரியது ஒடுக்கப்பட்ட மக்கள் குடிநீர் எடுக்கும் உரிமையைக்கூட சாதியின்பேரால் அடக்கி வைத்திருக்கும் கொடுமையைத் தீவுப்பகுதியில் காணலாம்" என்ருர்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் கே. செல்லத்தம்பி, கே. செல்லத்துரை, எஸ். நாகமுத்து ஆகியோருட்படப் பலர் உரைநிகழ்த்தினர். கவிதாஞ்சலியும் ஈற்றில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. [உ]

# மாணவனுக்குகத்திக்குத்து: சந்தேகநபர்கள் தலைமறைவு

(சங்கானை)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பாடசாலை மாணவர் ஒருவர் கிறிஸ் கத்திக் குத்திற்காளாகி அபாயகரமான நிலையில் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவதினத்திற்கு முதல் நாள் மாணவர்களுக்கிடையே எழுந்த வாக்குவாதமே இந்த இக் கத்திக் நிகழ்வதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது

சம்பவதினம் மதிய போசனத்திற்கு வீடு சென்று கொண்டிருந்த ஒரு மாணவரை சகமாணவர்களான இருவர் சேர்ந்து ஒருவர் கட்டிப் பிடிக்க மற்றவர் கத்தியினுல் குத்திவிட்டு இருவரும் தலைமறைவாகியுள்ளனராம். இது பற்றி சங்கானை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சார்ஜன்ட் திரு குலசிங்கம் தீவிரவிசாரணை மேற்கொண்டுள்ளார். (உ)

# தமிழ் மக்களுக்கு பிரச்னை இல்லையென்று வெளிநாடுகளில் கூறுவதால் அவை தீர்ந்துவிடாது

## பாராளுமன்றத்தில் 'நவம்'

(கொழும்பு)

ஆட்சிக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் எதுவும் இல்லை.' என்று கூறிவருவதால் தமிழர்களுக்குப் பிரச்னைகள் எதுவும் இல்லை என்று அர்த்தம் இல்லை, தமிழர்களது பிரச்னை தீர்ந்துவிடப் போவதுமில்லை.

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

வரவு செலவுத் திட்டவிவாதத்தில் திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஒரு வரவு செலவுத் திட்டத்தில் அரசின் கொள்கைகளும் அபிவிருத்தித் திட்டங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த அடிப்படையில் எம்மைப் பொறுத்தவரை இந்த வரவு செலவுத் திட்டம் ஏமாற்றத்துக்குரியதல்ல.

அரசியல் குழப்பங்கள் இருக்கும்வரை எந்த ஒரு நாடும் அபிவிருத்தித்துறையில் முன்னேற்றம் காணமுடியாது. அடிப்படை அரசியல் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியது ஆட்சியாளரின் கடமை. தமிழ் மக்களது பிரச்னையே எமக்கு மிகமுக்கிய அரசியல் பிரச்னையாகும்.

அரசியலில் பங்கு கொண்டுள்ளவர்கள் இந்த நாட்டின் முக்கிய பிரச்னைகளை விளங்காதது கவலைக்குரியதாகும்.

### ஜே. ஆர். பிரதமராக இருந்த போது...

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதமராக இருந்த போது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முக்கியதத்துவங்களை ஏற்றுக்கொண்டார்.

'ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பது உலக நாடுகளின் கடமை'

'அடிமைத்தனம் பூரணமாக உலகம் பூராகவும் அகற்றப்பட வேண்டும்' ஆகிய இரண்டையும் திரு. ஜெயவர்த்தன ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனவேதான் கேட்கிறோம் நீங்கள் ஏற்றுக் கொண்ட தத்துவங்களுக்கேற்ப தமிழர்களின் பிரச்னைகளைத் தீருங்கள்.

### தமிழினம் தனியினம்

தமிழ் இனம் தனி இனம் என்று ஏற்கும்வரை பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

சரித்திர ரீதியாகவும், பிரதேசரீதியாகவும் தற்போதைய சூழ்நிலையினாலும் இலங்கையில் தமிழ் இனம் ஒரு தனி இனம் என்பது வெளிப்படை.

அமரர் எம். திருச்செல்வம் 'ட்ரயல் அட் பார்' வழக்கில் தமிழர் இறைமைபற்றி 5, 6 நாட்களாக நிகழ்த்திய வாதத்தைப் படித்துப் பார்த்தால் தமிழ் இனம் தனி இனம் என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

ஆகவே தனி இனமான தமிழ் இனத்திற்கு தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையை எவரும் மறுக்க முடியாது.

### தமிழர் பிரச்னை தீர்க்க முடியாததல்ல

தமிழர் பிரச்னை தீர்க்க முடியாத ஒன்றல்ல. நமது பிரச்னைகளை நீங்கள் சரியாக உணர்ந்துகொண்டால் நாட்டைப் பிரிக்கும் பேச்சுக்கே இடமில்லை.

தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் எதுவும் இல்லை என்று வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் பேசிவருவதால் பிரச்னைகள் தீர்ந்துவிடாது.

1956, 58ம் ஆண்டுகளில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா லண்டனில் இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பிரச்னை இல்லை என்று கூறினார். 1960, 61ம் ஆண்டுகளில் திருமதி பண்டாரநாயக்காவும் இவ்வாறே வெளிநாடுகளில் பேசினார்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் புதுடில்லியில் இவ்வாறு பேசியுள்ளார்.

1815ம் ஆண்டே இலங்கை சுதந்திரத்தை இழந்தது என்று அவர் கூறினார். அவர் எந்த நாட்டை மனதில் வைத்துக் கொண்டு கூறினரோ எனக்குத் தெரியாது.

எம்மைப் பொறுத்தவரையில் 1619ம் ஆண்டே நாம் போர்த்துக்கேயரிடம் போர்க்களத்தில் எமது சுதந்திரத்தை இழந்தோம். (ம-இ)

---

## இன்று

[அரியாலை]

யாழ். மத்திய கல்லூரி கிறிஸ்தவ மாணவர் இயக்கமும், கத்தோலிக்க மாணவர் இயக்கமும் இணைந்து நடாத்தும் நத்தார் விழா இன்று மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கைத் திருச்சபை யாழ்ப்பாண அர்ச்டீக்கன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் அடிகள் கலந்துகொள்ளுவார்கள்.

---

## யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

## இன்று விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

''அரசாங்கத்தினல் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி சம்பந்தமான விசாரணைக் கமிஷன் யாழ் தொழில்நுட்பக்கல்லூரியில விசாரணையை மேற்கொள்கிறது.

இவ் விசாரணையை மேற்கொள்வதற்காக பேராசிரியா திரு. ஞானலிங்கம் தலைமையில் கொழும்பிலிருந்து வந்த குழு இன்று தமது விசாரணையை மேற்கொள்கிறது. (புலோலி கோண்டர், நிரு. (உ)

---

## இலங்கை சட்டக்கல்லூரி

## பிரவேசப்பரீட்சைக்கு 2000 மாவணர் தோற்றுவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை அடுத்த ஆண்டில் அனுமதிப்பதற்கான பிரவேசப் பரீட்சை அடுத்த மாதம் 6,7-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக மாணவர்கள், பிரவேசப் பரீட்சை இல்லாமலேயே சட்டக்கல்லூரியில் அனுமதிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு பிரவேசப் பரீட்சைக்கு 2000ற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் அதிகமானவர்கள் தமிழ்மாணவர்கள் என்று அறியப்படுகிறது. இவர்களுக்குரிய கருத்தரங்குகள், யாழ். வெளிவாரி பட்டப்படிப்புகள் நிறுவனத்திலும் நடைபெறுகிறது.

---

## காங்கிரஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இம்மாநாடு இம்மாதம் 26ம் தேதி நடப்பதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (க)

---

## புயல்காற்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன.

நேற்றிரவு சென்னை வானிலை அவதான நிலையத்தினர் விடுத்த எச்சரிக்கையில், நாகப்பட்டணத்துக்கு தென்கிழக்கே 400 மைல் தொலைவில் மையம் கொண்ட புயல்காற்று நேற்றிரவு அல்லது இன்று காலை இலங்கையின் வடகிழக்கு கடற்கரையை கடந்துசெல்லக் கூடும் என்று தெரிவித்துள்ளனர்.

### கடைசி செய்தி

நேற்றிரவு பிந்திக்கிடைத்த தகவல்களின்படி, மட்டக்களப்பில் கடும் காற்றுடன் மழைபெய்கிறது. பொலிஸாருடனுன தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (ம)

---

## "பால்மா, கோதுமை இறக்குமதியால் உள்நாட்டுப்பணம் விரயமாம்

### நிதிமந்திரி கவலை

[கொழும்பு]

''பாலுணவு, கோதுமை ஆகியவற்றின் இறக்குமதியால் பெருந்தொகைப் பணம் வெளிநாடுகளுக்குச் செல்கிறது.''

இவ்வாறு நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று கொழும்பு சட்டக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினர்.

ஒரு றாத்தல் மாவுக்காக சுமார் ஒரு ரூபாவை மான்யமாகச் செலுத்தவேண்டியுள்ளது என்று கூறிய அமைச்சர் தாய்ப்பாலை பிள்ளைகளுக்குக் கொடுத்து பால்மா செலவைத் தவிர்த்துக்கொள்ளப் பழக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (உ)

---

## வவனியாவில் ரயில் மோதி மரணமான இவர் யார்?

[வவனியா]

மதவாச்சிக்கும் - வவனியாவுக்கும் இடையில் ரயிலால் மோதுண்ட ஆண் ஒருவர் மரணமானார்.

(2-ம் பக்கம் பார்க்க)

---

## 85,000 ரூபா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சபைக்கு கிடைத்துள்ளது.

யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

75ம் ஆண்டு சபை இருந்த பொழுது 39,500 ரூபா ரெண்டரில் கொடுக்கப்பட்ட பெரியகடை மரக்கறி மார்க்கட் மும்மடங்காக அதிகரிக்கப்பட்டு 106311 ரூபாவிற்கு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

5,000 ரூபா வருமானம் அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

79ம் ஆண்டுக்குக் கூடுதலாக கிடைத்துள்ள தொகை வருமாறு:

பெரியகடை மார்க்கட் ரூபா 20,006, செங்குந்தா மார்க்கட் ரூபா 8,200, அரியாலை மார்க்கட் ரூபா 1600 நாவாந்துறை மார்க்கட் ரூபா 3100, பண்ணை மார்க்கட் ரூபா 16,800, சின்னக்கடை ரூபா 100, லொறிக்காலை ரூபா 95 000 நவீனமார்க்கட் சயிக்கிள் செட் ரூபா 4,960, ...ஷைரூா லசக்கிள் செட ரூபா 1110, பொதுசன நூலக சைக்கிள்செட் 1200, பண்ணை மீன் மார்க்கட் ரூபா 16,000. (க)

---

## தமிழ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்வரவேண்டும்,'' என்றும் அமைச்சர் செனிவிரத்தின கேட்டுக்கொண்டார்.

''நான் இராணுவத்தில் இருந்தவன். என்னிடம் குறுகிய மனப்போக்கு கிடையாது'' என்று குறிப்பிட்ட இவர் மேலும் கூறியதாவது:

''இங்கு பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம், இலங்கையில் மூன்று இராஜதானிகள் இருந்தாகக் குறிப்பிட்டார் எனக்கும் சரித்திரம் நன்கு தெரியும். சரித்திரத்தில் சின்ன வயதிலேயே நாட்டமாக இருந்தவன் நான். 3 இராஜதானிகள் இங்குஇருக்கவில்லை. தமிழ் ராஜ்யம் எதுவும்கூட இங்குஇருக்கவில்லை கோட்டை இராஜதானியம் மட்டும் இங்கு இருந்தது. ஒரே ஒரு தமிழ் மன்னன் எல்லாளன் மட்டும் சில காலம் ஆட்சி நடத்தினன். பின்னர் துட்டகைமுனுவினல் கொல்லப்பட்டான். அத்தோடு அவனது ஆட்சியும் முடிந்தது.

''தமிழர் இந்தநாட்டில் உரிமையுடன்தான் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர். சிங்களவர்களுடன் இணைந்து வாழ்கிறர்கள். எங்களால் ஒரு பிரச்னையும் ஏற்படாது. ஒற்றுமையுடன் வாழ்ந்து நாட்டைக் கட்டி எழுப்ப தமிழர் கூட்டணியினர் முன்வரவேண்டும்'' என்றர். (ம)

---

## சம்பள...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் வெளிநாடுகளுக்கு செல்வதும் தனியார் துறையை நாடுவதும் தவிர்க்கப்படும். இதேநேரத்தில் 200 ரூபா சம்பளம் பெறுபவர்கள் அண்மைக்கால அரசின் திடீர் விலையுயர்வினலும், கட்டண அதிகரிப்பினலும் கஷ்டமுறுவதால் குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 10 வீத சம்பள உயர்வு போதாது. இதை அரசு மீளாய்வு செய்ய வேண்டும் என்று கோருகிறேன்''

இவ்வாறு திருமலை எம். பி. இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தில் விவாதத்தில் நேற்று உரையாற்றுகையில் கூறினர்.

''முன்னைய அரசு துணிச்சலாக விலை அதிகரிப்பு செய்தது. ஆனல் இன்றைய ஐ. தே. அரசு, இரவோடு இரவாக விலையேற்றுகிறது. கடந்த ஜூலை 28ல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பாலுணவு வகைகளை விலையேற்றியது ஆகஸ்ட் 28ல் மாவின் விலையை 70 சதத்திலிருந்து 1-10 சதமாக உயர்த்தியது. நவம்பர் 1ல் மோட்டார் வரிகளை உயர்த்தியது. நவம்பர் 10ல் தபால் தந்தி, தொலைபேசிக் கட்டண உயர்வை கொண்டுவந்தது. இப்படி மின்சாரக்கட்டணம், பஸ் கட்டணம் அதிகரித்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருப்பதால் தேர்தல்கள் முடிந்து விலை அதிகரிப்பு செய்யப்படலாமென்று மக்கள் அஞ்சுகிறர்கள்?' என்றும் திருமலை எம். பி. தெரிவித்தார்! (ம)

---


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா செல்லப்பா

சங்கானையைச் சேர்ந்த திருமதி நாகம்மா செல்லப்பா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா (P. W. D. Overseer பண்டாரவளை) அவர்களின் அன்பு மனைவியும் சிவரத்தினம், செல்வரத்தினம், விஜயரத்தினம் (அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்), அரியரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாதேவா, நாராயணலிங்கம், அன்னபூரணம், லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 24-11-78 சங்கானையில் நடைபெறும்.

தகவல் கொடுப்பவர்:
பொ. நாராயணலிங்கம்
''ரூப-மகால்''
தேவாலய வீதி,
சங்கானை.

0875


---


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone: 689, Registered as a Newspaper in SriLanka.